இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2012 ஒகஸ்ட்

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

நல்ல நண்பன் போல நல்ல புத்தகம் எமக்கு நல்வழி புகட்டு மாணவப் பருவம் கிடைப்பதற்கு அரியது. அதனால் அப்பருவத்தை பிரயோசனம் உள்ளதாகக் கழிக்க வேண்டும். நல்ல புத்தகங்களைத் தேடிப்பெற்று அவற்றைக் கருத்தூன்றி வாசித்தல் வேண்டும்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(i) கிடைப்பதற்கு அரியது எது? ..............................

(ii) தேடிப்பெற்ற நல்ல புத்தகங்களை எவ்வாறு படித்தல் வேண்டும்? ..............................

(iii) பயன் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

(iv) எளியது என்ற சொல்லின் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக. ..............................

(v) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ..............................

(vi) முதலாம் வாக்கியத்திலுள்ள அடைமொழி ஒன்றினை எழுதுக. ..............................

02. (அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) நீ நீடுழி காலம் .............................. (வாழ், வாள்)

(ii) ஆழம் .............................. (அரியாமல், அறியாமல்) காலை விடாதே.

(ஆ) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) ஐம்பதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா: ..............................

(ii) தாய், தந்தை, ஆசான், அண்ணன், அரசன் என்போர்: ..............................

(iii) அகர வரிசையில் சொற்களின் கருத்தைக் கூறும் நூல்: ..............................

more Past papers
at www.Edukinniya.lk

03. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) What are these? : ..............................

(ii) Can you help me? : ..............................

04. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துகளில் எழுதுக.

தயவுசெய்து கதவைத் திற : ..............................

05. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துகளிலே எழுதுக.

(i)  ..............................

(ii)  ..............................

06. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.

அது எனது புத்தகம்: ..............................

07. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
மே அ(ப்)பே பந்திய : ..........................................................................................

08. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக
(i) அரசன் : முதியவன், மன்னன், அமைச்சன், புலவன்
(ii) சினம் : சாந்தம், இன்னல், கோபம், அமைதி
(iii) வனம் : பூமி, ஆகாயம், நாடு, காடு

09. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொல்லின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
(i) **சத்தியம்** பேசுதல் காந்தித் தாத்தாவின் கொள்கை. ..........................................
(ii) "என் மீது ஒருவரும் **அழுக்காறு** கொள்ளார்" என்றான் வீரன். ..........................................
(iii) "எனக்கு **அபயம்** அளியுங்கள்" எனப் புறா சிபிச்சக்கரவர்த்தியிடம் கேட்டது. ..........................

- 10 தொடக்கம் **39** வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

10. நான்கு இதழ்கள் உள்ள மலருக்கு உதாரணம்
(1) மல்லிகை (2) காட்டு மல்லிகை (3) வெட்சி (4) பவளமல்லிகை

11. இலங்கைக்கே உரிய தாவரம் யாது?
(1) குப்பைமேனி (2) நிலவேம்பு (3) சாத்தாவாரி (4) வல்லாரை

12. விலங்குகளின் மூலம் பரம்பல் அடையும் வித்துகள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
(1) இறப்பர், ஆவரை, கடல்மாங்காய்
(2) கடல்மாங்காய், காசித்தும்பை, மரமுந்திரிகை
(3) குன்றிமணி, காசித்தும்பை, ஒட்டுப்புல்
(4) மரமுந்திரிகை, புலிநகம், ஒட்டுப்புல்

13. ரின் மீனைக் கொள்வனவு செய்யும்போது குறைந்த அளவு கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயம்
(1) காலாவதியாகும் திகதி
(2) பொருள் கொள்வனவு செய்யப்படும் கடை
(3) பொருளின் தரம்
(4) பொருளின் வர்த்தகப் பெயர்

14. தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு யாது?
(1) குளவி (2) பாம்பு (3) கறையான் (4) தேள்

15. பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்கினமாக அமையாதது
(1) பனிப்பூச்சி (2) அழுக்கணவன் (3) நெல் தண்டுகோதி (4) தும்பி

16. நாற்றுமேடைகளை அமைத்து நாற்றுகள் பெறப்படும் பயிர் வகை
(1) வத்தாளை (2) கங்குன் (3) மிளகாய் (4) புடோல்

17. நுகத்தடி பயன்படுத்தப்படுவது
(1) மட்பாண்டக் கைத்தொழிலில்
(2) விவசாயக் கைத்தொழிலில்
(3) ஆடைக் கைத்தொழிலில்
(4) உலோகக் கைத்தொழிலில்

18. பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இந்தியாவிற்குத் தெற்கே இலங்கை அமைந்துள்ளது.
(2) இலங்கை ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தது.
(3) இலங்கை கண்ணீர்த் துளி வடிவமுள்ள தீவாகும்.
(4) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

www.Edukinniya.lk

19. தென்மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நகரம்
(1) களுத்துறை (2) பலாங்கொடை (3) அம்பலாங்கொடை (4) மொனராகலை

20. கொழும்பிலிருந்து பதுளை வரையுள்ள புகையிரதப் பாதையில் இருக்கும் ஒரு புகையிரத நிலையம்
(1) வட்டவளை (2) ஹபரணை (3) சீதுவை (4) வவுனியா

21. செக்கு பின்வரும் எத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும்?
(1) உழுதல் (2) நெல் தூற்றல் (3) எண்ணெயாட்டுதல் (4) மா இடித்தல்

**22.** உருவில் உள்ள உபகரணம் யாது?




(1) சாவணம்
(2) இடுக்கி
(3) துறப்பணம்
(4) சீவுளி

**23.** துருவலகையைத் / (துருவு பலகை) தீட்டப் பயன்படுத்தப்படும் உபகரணம்

(1) வாள் (2) அரம் (3) சுத்தியல் (4) உளி

**24.** உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?



(1) கலப்பை
(2) வேட்டைக்காரன்
(3) பெருங்கரடி
(4) சிறு கரடி

**25.** துப்புரவற்ற நீரைப் பருகுவதனால் பீடிக்கும் நோய்

(1) தடிமன் (2) குக்கல் (3) கூகைக்கட்டு (4) செங்கண்மாரி

**26.** தாதுசேன மன்னன் கட்டுவித்த குளம்

(1) கலா வாவி (2) அபய வாவி (3) மின்னேரியாக் குளம் (4)கிரித்தலைக் குளம்

**27.** உருவில் உள்ளவர்?



(1) திரு. எஸ். டபிள்யூ. ஆர், டீ. பண்டாரநாயக்கா
(2) கலாநிதி. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
(3) திரு. பொன்னம்பலம் இராமநாதன்
(4) திரு. வில்லியம் கோபல்லாவ

www.Edukinniya.lk

**28.** உருவில் மஞ்சள் நிறப் பின்னணியில் கருமை நிறத்தில் உள்ள வீதிக் குறி குறிப்பிடுவது




(1) படலை உள்ள புகையிரதப் பாதை
(2) படலை இல்லாத புகையிரதப் பாதை
(3) பாதுகாக்கப்பட்டுள்ள புகையிரதக் கடவை முன்னால்
(4) பாதுகாக்கப்படாத புகையிரதக் கடவை முன்னால்

**29.** உருவில் உள்ள நிழலினால் குறிக்கப்படும் பறவை



(1) கொக்கு
(2) கானாங்கோழி
(3) மரங்கொத்தி
(4) ஆட்காட்டிக் குருவி

**30.** பின்வரும் உருக்களில் புளியமரத்தைக் காட்டும் உரு யாது?



(1) (2) (3) (4)

31. கைக்குடையில் பூவைத் தைக்கும் போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?
(1) நரம்புத் தையல் (2) வெட்டுக்குத்துத் தையல்
(3) விசுப்பத் தையல் (4) கம்பளித் தையல்

32. தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் பிரசித்திபெற்ற அச்சு ஊடகம்
(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) செய்திப் பத்திரிகை (4) இணையம்

33. உடலிற்குத் தேவைப்படும் புரதத்தைப் பெறுவதற்கு உகந்த உணவு
(1) உருளைக்கிழங்கு (2) பருப்பு (3) கரட் (4) வல்லாரை

34. இக்குறியீட்டினால் குறிக்கப்படுவது யாது?
(1) இலங்கைக் கட்டளைகள் பணியகம்
(2) வீதி அபிவிருத்தி அதிகாரசபை
(3) இலங்கை மின்சார சபை
(4) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

35. நுளம்பின் மூலம் பரவும் நோய்
(1) கழிச்சல் (2) மலேரியா (3) வாந்திபேதி (4) நெருப்புக்காய்ச்சல்

36. இந்நீர்ப் பாத்திரத்தில் A யிலும் B யிலும் இருக்கத்தக்கவை முறையே
(1) மரத்துண்டு, நாணயம்
(2) மரத்துண்டு, பிளாத்திக்குத்துண்டு
(3) இரும்புத்துண்டு, மரத்துண்டு
(4) இரும்புத்துண்டு, நாணயம்




more Past papers
at www.Edukinniya.lk

37. நீரில் கரையும் பொருள்
(1) தேங்காயெண்ணெய் (2) மெழுகு (3) மண்ணெண்ணெய் (4) உப்பு

38. மின்காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணம்
(1) மின் மணி (2) நீராவிப் படகு (3) மின் குள் (4) ஊசித்துளைக் கமரா

39. குழு விளையாட்டு
(1) குண்டு போடுதல் (2) எல்லே அடித்தல் (3) தட்டெறிதல் (4) ஈட்டியெறிதல்

- தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையைத் தருக.

40. இலக்கங்களில் எழுதுக. முப்பதாயிரத்து எழுநூற்று ஐம்பது ..............................

41. எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.
3045, 3035, 3025, 3015 ..............................

42. 3, 5, 7 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களை ஏறு வரிசையில் ஒழுங்குபடுத்தி வெற்றிடங்களை நிரப்புக.
............., 375, ..............., ................., 735, ................

43. (i) தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{10}$ ஐ நிழற்றுக.



(ii) அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக. ..............................

44. ஐந்து நண்பர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூ.30 வீதம் 8 தோடம்பழங்களையும் ஒன்று ரூ.50 வீதம் 6 அப்பிள் பழங்களையும் வாங்கினர்.
(i) அப்பிள் பழங்களையும் தோடம்பழங்களையும் வாங்கத் தேவைப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு?
ரூ. ..............................
(ii) ஒவ்வொரு நண்பனும் இட்ட பணம் எவ்வளவு? ரூ. ..............................

**45.** ஒரு குறித்த மோட்டார் வாகனத்தை ஒரு லீற்றர் பெற்றோலில் 8 கிலோ மீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூ. 150 எனின், 40 கிலோமீற்றர் செலுத்தத் தேவையான பெற்றோலுக்கான செலவு யாது?

ரூ. ..............................

**46.** ஒரு நூலகத்திற்கு வந்து அங்கு 4 மணித்தியாலம் 30 நிமிடத்தைச்செலவிட்ட சங்கர் அங்கேயிருந்து பி.ப. 3.00 இற்குப் புறப்பட்டான்.

(i) சங்கர் புறப்பட்டுச் சென்ற நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

.............................. மணித்தியாலம்

(ii) சங்கர் நூலகத்திற்கு வந்த நேரம் யாது? முற்பகல் ..............................

**47.** 2012 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் முகுந்தனின் வயது 10 ஆண்டுகளும் 5 மாதங்களும் கமலனின் வயது 12 ஆண்டுகளும் 8 மாதங்களும் ஆகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

............ஆண்டுகள் .........மாதங்கள்



**48.** வெற்றிடங்களை நிரப்புக.


| | | |
|---|---|---|
| | 1 kg | 750 g |
| + | 2 kg | 500 g |
| | .........kg | ........g |

**49.** 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக இடும்போது ஒரு குவளையில் இருக்கும் நீரின் அளவைக் காண்க. (1 லீற்றர் = 1000 மில்லிலீற்றர்)

.....................மில்லிலீற்றர்.

**50.** உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 10 m ஆகும். பக்கம் AB யின் நீளம் 2 m 50 cm உம் பக்கம் BC யின் நீளம் 3 m 80 cm உம் ஆகும். பக்கம் AC யின் நீளம் யாது?

.................... m ............cm




**51.** உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.





| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | அம்பாந்தோட்டை | 245 km |
| கொழும்பு | மாத்தறை | 160 km |
| காலி | அம்பாந்தோட்டை | 125 km |
| காலி | மாத்தறை | ...... km |

**52.** உருவில் உள்ள உருளையில் இருக்கும்.


(i) தட்டையான மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது? ..............................

(ii) வளைந்த மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது? ..............................



53. (i) வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.
(ii) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

| பழ வகை | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாம்பழம் | 18 |
| அன்னாசி | 20 |
| கொய்யா | 25 |
| தோடம்பழம் | .............. |




● பின்வரும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

54. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ..................................மாணப்பெரிது

55. காந்தியடிகள் எழுதிய ...................................................... என்ற நூல் அவரது சுயசரிதையாகும்.

56. விஜயநகர அரசை ஆட்சிசெய்த கிருஷ்ண தேவராயன் அரசவையில் ................................................ என்பவன் விகடகவியாக இருந்தான்.

● வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறியிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

57. பார்வையாளர் கூட்டம் மெல்லமெல்லக் கலையத் ................................ (தொடங்கியது / தொடங்கினர்)

58. நாட்டார் இலக்கியத்தின் ஒரு பகுதியாகத் ................................ (திகழ்வன / திகழ்வது) பழமொழியும் விடுகதையும் எனலாம்.

59. பத்திரிகைகள் மாணவருக்கு மட்டுமன்றி சகலருக்கும் .................................. (பயன்படுகின்றனர் / பயன்படுகின்றன) அல்லவா?

60. 'தேசியக் கொடி ஒரு நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது.' இலங்கையின் தேசியக் கொடி பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகள், எழுத்துக்கூட்டல் ஆகியன சரியாக இருக்க வேண்டும்.)

(i) ..............................................................................................................................
..............................................................................................................................

(ii) ..............................................................................................................................
..............................................................................................................................

(iii) ..............................................................................................................................
..............................................................................................................................

www.Edukinniya.lk